
# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 30 திங்கட்கிழமை 14.07.2025 கதிர் 254



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel

## வவுனியா மாநகரத்தில் வீதியோர வியாபார நிலையங்கள் அகற்றப்படுகின்றமைக்கு எதிராக வர்த்தகர்கள் போர்க்கொடி





வவுனியா, ஜூலை 14

வவுனியா மாநகர சபையால் இலுப்பையடி வீதியோர வியாபார நிலையங்கள் அகற்றப்பட்ட போது அந்தப் பகுதியில் வீதியோர வியாபாரிகளுக்கும்

7

# அதிகாரத்துக்காக எதையும் செய்யும் அநுர அரசாங்கம்

## போட்டுத் தாக்குகின்றது சஜித் அணி




கொழும்பு, ஜூலை 14


உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் எனக் கூறும் தேசிய மக்கள் சக்தி அரசு, கிழக்கில் ஆட்சியமைப்பதற்கு அவரின் உதவியையும் பெற்றுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

7

## கடும் நிபந்தனையுடன் துமிந்தவுக்குப் பிணை



கொழும்பு, ஜூலை 14

கொழும்பு - வெள்ளவத்தையில் உள்ள ஒரு சொகுசு அடுக்குமாடி குடியிருப்பில் தங்க முலாம் பூசப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி கண்டு பிடிக்கப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்

7

## இந்த அரசாங்கத்தை நிச்சயம் வீழ்த்துவோம்

### ராஜிதவின் மகன் சூளுரை




கொழும்பு, ஜூலை 14

எனது தந்தை கைது செய்யப்படுகின்றாரோ, இல்லையோ இந்த அரசாங்கம் நிச்சயம் வீழ்த்தப்படும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்வின் மகனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சத்துர சேனாரத்ன தெரிவித்தார்.

7

## பிரசன்ன ரணவீரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 14

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை

7

## யாழில் 14 வயது சிறுமி துஷ்பிரயோகம்: புலம்பெயர் நாட்டவர் ஒருவர் சிக்கினார்



யாழ்ப்பாணம், ஜூலை 14

புலம்பெயர் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து 14 வயதுடைய சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலயத்துக்குச் சென்ற சிறுமியுடன்

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கல்குடா முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும்




கொழும்பு, ஜுலை 14

ஒரு பிரதேச மக்களின் வளர்ச்சி அந்த மக்களுடைய வரலாற்றை எவ்வாறு அவர்கள் புரிந்து கொள்கிறார்கள் என்பதில் தங்கி உள்ளது. அந்த வகையில் 'கல்குடா முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும்' என்ற நூல் இப்பிராந்திய மக்களின் வரலாற்று பொக்கிஷமாக அப் பணியை நிறைவேற்றும் என்று தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எம்.சி.ஏ நாசர் தெரிவித்தார்.

மேற்படி நூலின் வெளியீட்டு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை ஓட்டமாவடியில் இடம்பெற்ற போது அதில் முதன்மை அதிதியாக கலந்து கொண்ட அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியிலும் மாற்றத்திலும் கல்வி ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு கிராமத்தின் வரலாற்றை நோக்கும்போது அங்கு கல்வி எவ்வாறு பரவியது,அதனால் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன என்ற விடயங்கள் முக்கியமாக நோக்கப்படுகின்றது. கல்வி வளர்ச்சி அப்பகுதி மக்களின் வாழ்வியலின் ஒவ்வொரு பகுதியிலும் தாக்கம் செலுத்துகின்றது.

ஒரு சமூகத்தின்,பிரதேசத்தில் வரலாற்றை எழுதுவது ஒரு சாதாரண காரியம் அல்ல.மிகப் பெரும் பொறுப்புள்ள பணியாகும்.அந்த வகையில், இன்று வெளியிடப்படும் இந்த வரலாற்று நூல்,நமது பிராந்தியத்தின் அடையாளமாக,தொன்மையை கூறும் பொக்கிஷமாக,கலாச்சாரத்தின் பிரதிநிதியாக, பூர்விகத்தின் குரலாக அமைகிறது.

இது வெறுமனே பக்கங்களால் ஆன ஒரு புத்தகம் அல்ல காலத்தின் நினைவுகளால் ஆன ஓர் ஒப்பற்ற ஆவணமாகும்.நமது வீரர்களின் தியாகம்,நமது பண்பாட்டின் வளர்ச்சி, சமூகத்தின் மரபுகள், விழாக்கள், பழக்கவழக்கங்கள், அனைத்தும் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப வளர்ச்சியில் மூழ்கியுள்ள இளம் தலைமுறையினர் ஒரு பொக்கிஷமாக கருதி,இதை வாசித்து,நமது பிராந்தியத்தின் மீது அன்பு வளர்க்க வேண்டும்” என்றார். (ஐ)

# குடிநீர் திட்டம் நடைமுறைப்படுத்த கள விஜயம்

கொழும்பு, ஜுலை 14

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் கிராமத்தில் பாலியாறு குடிநீர் திட்டம் நடைமுறைபடுத்துவதற்கான ஒருங்கிணைந்த கள விஜயம் ஞாயிற்றுக்கிழமை (13) மாலை இடம்பெற்றது

குறித்த கள விஜயதில் வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் மற்றும் வீடு அமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் , மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ,நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் அரச உயர் அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள் கிராம் மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்

தொடர்ந்து அரச திணைக்கள அதிகாரிகளால் திட்டம் தொடர்பான விளக்கம் அமைச்சர் உள்ளிட்ட குழுவினருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசத்தினை அமைச்சர் குழுவினர் சென்று பார்வையிட்டனர். (ஐ)



# கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான கலந்துரையாடல்







கொழும்பு, ஜூலை 14

2026 ஆம்ஆண்டு முதல்நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான மாகாண, பிராந்திய மற்றும் பிரதேச மட்டத்திலான கல்வி மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் கிழக்கு மாகாணத்திற்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை (13)அன்று கிழக்கு மாகாண கல்வி திணைக்கள கேட்போர் கூடத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றது.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி அமைச்சர் மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய அவர்கள் தெரிவித்ததாவது,கடின பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்யும் போது கிராமத்தில் கஷ்ட நிலை அல்லது பரிச்சயத்தின் அடிப்படையில் அல்லாமல், மாவட்ட அபிவிருத்தி குழுவின் ஒப்புதலுடன் உரிய முறையில் தேர்வு செய்யப்பட வேண்டும் எனக் கூறினார்.

அத்தோடு, புதிய கல்வி சீர்திருத்தத்தின் மூலம் பாடசாலை முடித்து வெளியாகும் அனைத்து மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு அல்லது பட்டப்படிப்பு தொடர வாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கும் வரலாற்றுப் பெரும் வாய்ப்பாகும். சர்வதேசத்துடன் பொருந்தக்கூடிய தரமான கல்வியை வழங்குவதற்கு இந்த சீர்திருத்தம் உதவும். பாடசாலையை கல்வியை விட்டு வெளியேறும் போதே வேலைவாய்ப்புக்குத் தகுதியானவர்களாகவும் அல்லது உயர்கல்விக்கு செல்லத் தகுதியான வர்களாகவும் மாணவர்களை உருவாக்குவதே நோக்கமாகும்.

மாணவர்களுக்கு தேசிய தொழிற் தகைமை (NVQ ) சான்றிதழ் வழங்கி வேலைவாய்ப்புக்குத் தயாராக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. திறன்கள் (எழுகவ ஸமடைடள) முன்பு பல்கலைக்கழகங்களில் கற்றுக்கொடுக்கப்பட்டன,

ஆனால் அவை பாடசாலை மட்டத்திலேயே வழங்கப்படும். 9ஆம் வகுப்பு முதல் மாணவர்கள் தங்கள் எதிர்கால தொழிலைத் தேர்வு செய்யும் அனுபவத்தைப் பெறும் வகையில் புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

11 அல்லது 13 ஆண்டுகள் கல்வி முடித்த பிறகு வேலைவாய்ப்பைத் தேர்ந்தெடுக்கவும், பட்டப்படிப்பு தொடரவும் அல்லது இரண்டையும் ஒரே நேரத்தில் செய்வதற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

சீர்திருத்தத்தின் போது பாடத்திட்டம் மட்டுமல்லாமல், பாடசாலை அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது,ஆசிரியர்களை பயிற்றுவிப்பது,மக்களிடையே ஆராய்ச்சி மற்றும் கலந்துரையாடல் ஏற்படுத்துவதும் செய்யப்படும்.

அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை முறையாக பயன்படுத்த வேண்டும்.கஷ்ட பிரதேச பாடசாலைகளைத் தேர்ந்தெடுக்கும்போது கிராமத்தின் நெருக்கடி அல்லது நண்பர்கள் காரணமாகத் தேர்வு செய்யக் கூடாது.

உறுதியான நடைமுறைப்படி,மாவட்ட அபிவிருத்தி குழுவின் ஒப்புதலுடன் தேர்வு செய்ய வேண்டும்.கஷ்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களை அந்தந்த கிராமங்களுக்குள் வைத்து தரமான கல்வி வழங்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சு, மாகாண சபைகள், மாகாண கல்வி திணைக்களம், வலய மற்றும் பிரதேச கல்வி அலுவலகங்கள் ஒருங்கிணைந்து ஆதரவளிக்க வேண்டும் என்றும் பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்கள் வலியுறுத்தினார்.

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர,வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமசந்திர,பாராளுமன்ற உறுப்பினர்களான ரொஷான் அக்மீமன, சண்முகம் குகநாதன்,கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவேவ,மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்,பிரதம செயலாளர்,மாகாண கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், மாகாண கல்வி திணைக்களம் மற்றும் வலயக் கல்வி அதிகாரிகள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர். (ஐ)




## வீதியை புனரமைத்து தருமாறு கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 14

நுவரெலியா நானுஓயா ரதெல்ல கீழ் பிரிவு தோட்ட மக்கள் வீதியில் இறங்கி திங்கட்கிழமை (14) அன்று காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நானுஓயா ரதெல்ல கீழ் பிரிவு தோட்டத்தில் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இந்த தோட்டத்தில் இருந்து தலவாக்கலை செல்லும் இரண்டு கிலோமீட்டர் தூரங்கொண்ட வீதி பல வருட காலமாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பதாகைகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பி கோரிக்கைகளை முன் வைத்தனர்.

கடந்த அரசாங்கத்தில் 2020 ஆம் ஆண்டு புனரமைப்பு பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகளை ஆரம்பிப்பதற்கான . அடிக்கல் நட்டப்பட்டது. வேலை திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இடையில் கைவிடப்பட்டுள்ளது.

தற்போது இப்பாதையின் ஊடாக செல்ல முடியாத நிலையில் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் கர்ப்பிணி தாய்மார்கள் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் தொழிலுக்கு செல்பவர்கள் என பலரும் ஒவ்வொரு நாளும் பல்வேறு சிரமத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பாதையை உடனடியாக புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்து கலைந்து சென்றனர் . (ஐ)

## ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 14

ஐஸ் போதைப்பொருளை சூட்சுமமாக மறைத்து வைத்திருந்த இரு சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸார், ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லரிச்சல் 01 பகுதியில்ஐஸ்போதைப்பொருளுடன் நடமாடுவதாக சம்மாந்துறை பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்அடிப்படையில்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது அப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இரு சந்தேக நபர்கள் சோதனை செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்த கையடக்கதொலைபேசியின் உட்பகுதியில் ஐஸ் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. கைதான சந்தேக நபர்கள் சம்மாந்துறை புளக் ஜே 02 பகுதியைச் சேர்ந்த 28 வயது மற்றும் கல்லரிச்சல் 03 பகுதியைச் சேர்ந்த 19 வயது சந்தேக நபர்களாவர்.

இதன் போது ஒருவரிடமிருந்து 2 கிராம் 631 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் உட்பட கையடக்க தொலைபேசி பணம் என்பன மீட்கப்பட்டதுடன் மற்றவரிடமிருந்து 330 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டன. மேலும் சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கொக்குத்தொடுவாய் புதைகுழி என்புத் தொகுதிகள்: பெரும்பாலானவர்கள் 13 முதல் 30 வயதுடையவர்கள்

முல்லைத்தீவு, ஜூலை 14

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட 52 மனித என்புத் தொகுதிகளில், உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இளவயதினர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் வெடிப்புக் காயங்களால் உயிரிழந்துள்ளமையும், துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளமையும் பகுப்பாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி கடந்த ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி அடையாளம் காணப்பட்டது.

குழாய் நீர் பொருத்தும் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பிரதான வீதியோரத்தில் இந்த மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டது.

அதன்தொடர்ச்சியாக அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி கே.வாசுதேவா மற்றும் யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன் ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல்துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையில் 52 மனித என்புத் தொகுதிகள் அங்கிருந்து மீட்கப்பட்டன.

அத்துடன் ஆடைகள், துப்பாக்கி ரவைகள் உட்பட வேறு தடயப்பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்ட என்புத் தொகுதிகளின் பகுப்பாய்வு அறிக்கையில் இறந்தவர்கள் ஏன் இறந்தார்கள்? என்ன காரணத்தால் இறந்தார்கள்? அவர்களின் வயது எத்தனை? போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளில் 31 பெண்களுடையவை என்றும், 21 ஆண்களுடையவை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் வயது எல்லை 12 முதல் 53 வயது வரை உள்ளது. அதேநேரம் பெரும்பாலானவர்கள் 13 முதல் 30 வயதுடையவர்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது. 32 பேரின் உயிரிழப்புக்கு வெடிப்புச் சம்பவம் அல்லது வெடிப்புக் காயம் காரணமாகவுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக் காயத்தால் 7 பேர் உயிரிழந்துள்ளனர். வெடிப்புச் சம்பவம் மற்றும் துப்பாக்கிச்சூடு காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

பெரும்பாலான உயிரிழப்புகள் வெடிப்புக் காயங்களால் ஏற்பட்டுள்ளன என்பது பகுப்பாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.





## பழம்பெரும் நடிகை சரோஜாதேவி உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும்: கர்நாடக அரசு

பழம்பெரும் நடிகை சரோஜாதேவி உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என கர்நாடக அரசு தெரிவித்துள்ளது. பெங்களூருவில் சரோஜாதேவி இல்லத்தில் அவரது உடல் நாளை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். சொந்த ஊரான ராம்நகரா மாவட்டம் தஷ்வாரா கிராமத்தில் அரசு மரியாதையுடன் நாளை நல்லடக்கம் செய்யப்படும் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நிமிஷா மரண தண்டனையை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது: ஒன்றிய அரசு





கேரள செவிலியருக்கு மரண தண்டனை நிறைவேற்றுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. கேரள செவிலியருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்படுவதை தடுத்து நிறுத்தக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஏமனில் செவிலியர் நிமிஷா பிரியாவுக்கு ஜூலை 16ல் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட உள்ளது. உச்ச நீதிமன்றத்தில் ஒன்றிய அரசின் சார்பில் ஆஜரான அட்டார்னி ஜெனரல் தகவல் தெரிவித்தார். மரண தண்டனையை நிறுத்த எடுத்த நடவடிக்கைகளை வெளிப்படையாக தெரிவிப்பதில் சிக்கல் உள்ளது என ஒன்றிய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# பீகாரில் தலைதூக்கிய துப்பாக்கி கலாசாரம் 24 மணி நேரத்தில் 4 பேர் சுட்டுக்கொலை:

## தேர்தல் நேரத்தில் கேள்விக்குறியாகும் சட்டம்-ஒழுங்கு



பீகாரில் துப்பாக்கி கலாசாரம் தலைதூக்கிய நிலையில் நேற்றுடன் முடிந்த 24 மணி நேரத்தில் 4 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். தேர்தல் நேரத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாக கூறப்படுகிறது. பீகாரில் சட்டம்-ஒழுங்கு மிக மோசமாகச் சீர்குலைந்து வருவதை எடுத்துக்காட்டும் வகையில், நேற்று மாலையுடன் முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் அடுத்தடுத்து நான்கு துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. சீதாமர்ஹி மாவட்டத்தின் மிகவும் நெரிசல் மிகுந்த சந்தைப் பகுதியான மெஹ்சால் சவுக்கில், புட்டு கான் என்ற தொழிலதிபர் பட்டப்பகலில் நெற்றியில் சுட்டுக் கொல்லப்பட்டார். சிசிடிவி காட்சிகளில் பதிவான இந்த கொடூரத் தாக்குதலுக்கு, நிலத்தகராறே காரணம் என்று அவரது குடும்பத்தினர் குற்றம்சாட்டி, உடலை வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அதிர்ச்சி அடங்குவதற்குள், பாட்னா மாவட்டத்தின் ஷேக்புரா கிராமத்தில், தனது வயலுக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்த கால்நடை மருத்துவர் சுரேந்திர குமார் (50), பைக்கில் வந்த மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் பாஜகவின் விவசாயப் பிரிவின் முன்னாள் தொகுதித் தலைவர் என்பதால், அரசியல் கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருகிறது. இதேபோல், பாட்னாவின் ராமகிருஷ்ணா நகர் பகுதியில் விக்ரம் ஜா என்ற மளிகைக் கடைக்காரர் அடையாளம் தெரியாத நபரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு முன்னதாக சுல்தான்பூர் காவல் நிலையப் பகுதியில் வழக்கறிஞர் ஜிதேந்திர குமார் மஹ்தோ (58) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். தினமும் தேநீர் அருந்தும் இடத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போது, இந்த கொடூரத் தாக்குதல் நடந்துள்ளது.

பீகாரில் சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் வேளையில், பொதுமக்கள், தொழிலதிபர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பல தரப்பினரையும் குறிவைத்து அடுத்தடுத்து நடந்த இந்த அடுக்கடுக்கான படுகொலைகள், மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு நிலை குறித்து பெரும் அச்சத்தையும், கடுமையான கேள்விகளையும் எழுப்பியுள்ளன. எதிர்கட்சிகளும் ஆளும் பாஜக கூட்டணி அரசை கடுமையாக விமர்சித்து வருகின்றன. தொடர் குற்றச் சம்பவங்களால் பொதுமக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவி வரும் நிலையில், குற்றவாளிகளை அடையாளம் கண்டு கைது செய்ய காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## ஆழியாற்றில் ஆபத்தை உணராமல் குளிக்கும் சுற்றுலா பயணிகள்

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணைக்கு, உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்து செல்கின்றனர். ஆழியார் அணையை ஆற்றோரம் சுற்றி பார்க்க வரும் பயணிகள் பாலத்தின் கீழ் பகுதி மற்றும் தடுப்பணை உள்ளிட்ட இடங்களில் குளிக்க தடை உள்ளது.

கடந்த சில மாதமாக ஆழியாற்று தடுப்பணையில் தடையை மீறி சுற்றுலா பயணிகள் செல்வதை தடுக்க கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது, போலீசார் மற்றும் பொதுப பணித்துறையினர் கண்காணிப்பு பணியை முறையாக மேற்கொள்ளவில்லை என கூறப்படுகிறது. இதனால், தற்போது மீண்டும் தடுப்பணையில் சுற்றுலா பயணிகள் குளிக்க துவங்கியுள்ளனர்.

போதிய கண்காணிப்பு இல்லாததால் விடுமுறை நாட்களில் வரும் சுற்றுலா பயணிகளில் சிலர் தடை செய்யப்பட்ட பகுதி என்று தெரியாமல் குளிக்கின்றனர். தற்போது மழை குறைவால் ஆழியாருக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாக உள்ளது.

தடுப்பணை அருகே எச்சரிக்கை பலகை வைத்திருந்தாலும் அங்கு வரும் சுற்றுலா பயணிகளை கண்காணித்து நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாக கூறப்படுகிறது. எனவே, வருங்காலங்களில் ஆழியாற்றில் தடையை மீறி குளிப்போரை தடுக்கவும் அங்கு வரும் சுற்றுலா பயணிகளை கண்காணிக்கவும் அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)




## ரயில்வே துறைக்கு ராமதாஸ் கடும் கண்டனம்

*தனி பட்ஜெட்டில் இயங்கிய ரயில்வே துறையை பொது பட்ஜெட்டில் கொண்டு வந்ததே முதல் சீர்கேடு என பாமக நிறுவனர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். பாதி நாள் எரிந்த ரயில் பெட்டிகளால் பொதுசுகாதாரம் கேள்விக்குறியாகி உள்ளதாக ராமதாஸ் குற்றச்சாட்டு வைத்தார்.*

*(ஐ)*

# உதிரத்தில் ஓவியம்!

–சௌமியா



பெண்ணின் உடல் குறித்தும், மாதவிடாய் காலம் குறித்தும் பல விழிப்புணர்வு முன்னெடுப்புகளை ஊடகமும் சில தன்னார்வல அமைப்புகளும் எடுத்து வருகின்றன. இருப்பினும் பொதுச்சமூகத்தில் மாதவிடாய் குறித்த அணுகுமுறையில் போதுமான அளவு முன்னேற்றம்

இல்லை. மாதவிடாய் காலத்தில் பெண்களைத் தனியறையில் தங்க வைப்பதும், அவர்களுக்கென தனி பாய், தட்டு போன்றவை தனியாக எடுத்துவைக்கப்படுவதும், மாதவிடாய் காலத்தில் பெண்களைத் தொட்டால் தீட்டு என்று தலை குளிப்பதும் இன்றும் தமிழ் குடும்பங்களில் தொடர்கிறது. பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்படும்போது தொட்டாலே தீட்டு என்று சொல்பவர்களுக்கு, மாதவிடாய் இரத்தத்தினால் வரையப்பட்ட ஓவியம் என்றால் கூடுதல் அச்சத்தையும் வியப்பையும் ஏற்படுத்தும்.

மாதவிடாய் இரத்தத்தில் ஓவியங்கள் வரைந்து, மாதவிடாய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திவருகிறார் சென்னையைச் சேர்ந்த சபரிதா. இருபத்தாறு வயது நிரம்பிய சபரிதா சமூகப்பணிக்கான முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். தற்போது ஒரு தன்னார்வல அமைப்பில் வேலை செய்கிறார். இதனுடன் மாதவிடாய் ரத்தத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் மூலம் மென்ஷஸ் வித் மென் (ஆநுளேநுளு றுஜவுஉ ஆநுே) என்கிற விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார். சிறுவயதில் ஏற்பட்ட மாதவிடாய் கசப்பான அனுபவங்கள், சமூகத்தின் மீதான கோபம் போன்றவை அவரை மாதவிடாய் ரத்த ஓவியங்கள் வரையத் தூண்டியுள்ளன.

இந்த விழிப்புணர்வு பிரசாரம் முன்னெடுப்பதற்கான நோக்கம், பிரசாரத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் குறித்துப் பகிர்ந்து கொள்கிறார் சபரிதா.

“சிறு வயதில் என் பெரியம்மா வீட்டில்தான் வளர்ந்தேன். எனக்கு அம்மா, அப்பா இல்லை. நான் முதன்முதலில் மாதவிடாயை எதிர்கொண்ட போது கூச்சப்பட்டுக்கொண்டே என் பெரியம்மா பெண்ணிடம் தகவலைத் தெரிவித்தேன். வீட்டில் அப்போது உறவினருக்குக் காரியம் நடந்து கொண்டிருந்தது. தகவல் தெரிவித்த உடனே என் பெரியம்மா ஊரைக் கூப்பிட்டு மஞ்சள் தண்ணீர் ஊற்றினார். அப்போது விவரிக்க முடியாத வெறுப்பு என்னுள் ஏற்பட்டது. ஏன் நம் குழந்தைப் பருவத்தைக் சிக்கலுக்குரியதாக்குகிறார்கள் என்று கோபப்பட்டேன்.. மாதவிடாய் காலத்தில் பள்ளி, பேருந்து போன்ற இடங்களில் உட்காருவதற்குக் கூச்சப்பட்டேன். கறை படிந்துவிடுமோ என்று அச்சம் இருந்துகொண்டே இருக்கும்.

நான் வேலைக்குச் செல்லாத காலம் என்பதாலும், பெரியம்மா வீட்டில் வளர்ந்ததாலும் எனக்கு சௌகரியமான நேப்கின் பயன்படுத்த முடியவில்லை. வீட்டில் அவர்கள் வாங்கி வைக்கும் நேப்கினைத்தான் பயன்படுத்த வேண்டும். அது எனக்கு செங்கல் போல் உணர்வை ஏற்படுத்தும். எனக்கு மாதவிலக்கு மாதத்திற்கு ஒருமுறை வராமல், 4 மாதங்களுக்கு ஒருமுறை, 6 மாதங்களுக்கு ஒருமுறை வரும். அதனால் என்னால் என் மாதவிடாயைக் கையாள்வதில் சிரமம் இருந்தது. நான் அனுபவித்ததெல்லாம் கொஞ்சம்தான். தெருவோரத்தில் வாழும் குழந்தைகள் எவ்வாறு மாதவிடாய் காலங்களை எதிர்கொள்கிறார்கள் என்று நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. அவர்களுக்கென்று தனிக்கழிப்பறை கிடையாது, பொதுக்கழிப்பறைதான், அதுவும் சுத்தமாக இருப்பதில்லை. விளிம்புநிலையில் உள்ள பெண்களுக்கு நாப்கின் கூட வாங்குவது சிரமம். விளிம்புநிலை பெண்கள்நசழைனளிழளநசவலயைச் சந்திக்கின்றனர். பெரும்பாலான பெண்கள் சுகாதாரமில்லாமல்தான் மாதவிடாயைக் கழிக்கின்றனர். மாதவிடாய் காலத்தில் சுகாதாரமில்லாத காரணத்தால் மாணவிகள் பள்ளிக்குத் தொடர்ந்து செல்ல இயலவில்லை.

மாதவிடாய் குறித்துப் பேசக்கூட ஆண்களும் பெண்களும் இன்னும் தயங்குகின்றனர். மாதவிடாய் கறையையும் இரத்தத்தையும் அசிங்கமாக பார்க்கும் நிலை ஒழிய நான் எடுத்த ஆயுதம்தான், ’மாதவிடாய் உதிர ஓவியம்.’ எதைக் கேவலம் என்று இந்தச் சமூகம் நினைக்கிறதோ, எந்த உதிரத்தை வைத்துப் பெண்களைச் சமூகம் ஒடுக்குகிறதோ அதையே என் ஆயுதமாக எடுத்துள்ளேன். முதலில் என் நண்பர்கள் வட்டத்தில் பெரியளவு வரவேற்பு இல்லை. எதிர்ப்புகள் வலுவாக இருந்தன. ஆனால், தற்போது என்னுடன் சேர்ந்து ஆண்களும் வரைய விரும்புகின்றனர்.



### எவ்வாறு ரத்தத்தைக் கொண்டு ஓவியம் தீட்டுவீர்கள்?

மாதவிடாய் காலங்களில் வரும் ரத்தத்தை ஏதாவது கண்ணாடி டப்பாவில் சேகரித்து வைப்பேன். வீட்டில் இருக்கும் பெயிண்ட் பிரஷ் கொண்டு போஸ்ட் கார்டில் அல்லது கடினமான தாளில் ஓவியம் வரைவேன். வரைந்த ஓவியங்களை வெயிலில் காயவைத்து, பிளாஸ்டிக் கவரில் போட்டு வைப்பேன். இது கிருமிகளிடமிருந்து பாதுகாக்கச் செய்ய வேண்டுமென்று மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். நான் விழிப்புணர்வு பிரசாரத்தைத் தொடங்கிய காலத்தில் ஆண்களுக்கு மாதவிடாய் குறித்துப் புரிதல் குறைவாக இருந்தது. ஆண்களையும் மாதவிடாய் குறித்த கலந்துரையாடல்களில் உள்ளடக்கும் நோக்கத்தில் சமூக வலைதளம் மூலமாகவும் நேரடியாகவும் அவர்களுக்கு மாதவிடாய் உதிர ஓவியங்கள் வேண்டுமா என்று கேட்டு வரைந்து தருவேன். பெரும்பாலானோர் வாங்கினார்கள். ஒரு சிலர் மட்டுமே பயந்து ஓடினர்.

பிரசாரம் மேற்கொண்ட போது ஒருவர் என்னிடம் ஏன் இந்த ஓவியங்கள் மூலம் இவ்வளவு வன்முறையாக (எழைடநவெ) நடந்துகொள்கிறீர் என்றார். இந்தக் கேள்வி பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எத்தனையோ கொலை, பாலியல் வன்கொடுமை நடக்கும் சமூகத்தில் பெண்ணின் மாதவிடாய் உதிரம் வன்முறையாக உள்ளதா? ஏன் இவர்கள் பார்வை பிற்போக்குத்தனமாக உள்ளது என்று என்னுள் கேள்வி வந்தது.

ஓவியங்கள் மட்டுமல்லாமல் மாதவிடாய் குறித்த பெண்களின் அனுபவங்களைப் பெயர், முகவரி இல்லாமல் சேகரித்து வருகிறோம். அது மட்டுமல்லாமல் மாதவிடாய் கறையைச் சாதாரணமானது என்பதை உணர வைக்க பெண்களிடமிருந்து மாதவிடாய் கறை படிந்த பேப்பர்களைச் சேமிக்கிறோம். இவ்வாறான முயற்சிகளை எல்லாப் பெண்களும் சாதாரணமாக எடுத்துக்கொள்வதில்லை. அதனால் முதற்படியாக நெருங்கிய வட்டத்தில் புரிதல் ஏற்படுத்தி சேகரிக்கிறோம். மாதவிடாய் ஏற்பட்டால்தான் பெண்மை என்று கருதும் சூழல் மாற வேண்டும். ஏனென்றால் இங்கு பால்புதுமையினரும் இருக்கிறார்கள். இவ்வாறான கருத்துகள் அவர்களை மனதளவில் காயப்படுத்தும் என்கிறார்.

நாங்கள் ஒரு குழுவாக இணைந்து பயணிக்கிறோம். இந்த ஓவியங்களைச் சமூக வலைதளங்களில் மட்டுமல்லாமல் பொதுவெளியில் கொண்டுவரும் விதமாக வளசரவாக்கத்தில் உள்ள கூகை நூலகத்தில் காட்சிப்படுத்தினோம். பின்னர் ராயப்பேட்டையில் உள்ள சிந்தன் புக்ஸ் படிப்பகத்தில் காட்சிப்படுத்தினோம்.

இதன் மூலம் முற்போக்காகச் சிந்திக்கும் நண்பர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு கிடைத்தது. எதிர்காலத்தில் மாதவிடாய் குறித்த ஓவியங்களையும், பிரசாரங்களையும், பெண்களின் மாதவிடாய் அனுபவங்களையும் முழுமையாக ஆவணப்படுத்த உள்ளோம்.

இப்பணியின் முதற்கட்டமாக பெண்களின் மாதவிடாய் அனுபவங்களை ஜிழவகையில் வெளியிடத் தொடங்கிவிட்டோம். மாதவிடாய் குறித்து முற்போக்காகப் பேசும் நண்பர்கள் என் ஓவியங்களை முன்னிறுத்திப் பேசத் தொடங்கியுள்ளனர். லயோலா கல்லூரி மாணவர் குணா காலேஜ் அசைன்மெண்ட்டுக்காக என்னுடைய ஓவியங்களை ஆவணப்படுத்தியுள்ளார். முன்பெல்லாம் எதிர்ப்பு அதிகமாக இருந்தது. தற்போது ஆதரவு கரங்கள் அதிகரித்துள்ளன. பெரும்பாக்கத்தில் உள்ள பெண் குழந்தைகளுடன் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் மாதவிடாய் சுகாதாரம் குறித்து உரையாடுகிறேன்" என்றார்.

மாதவிடாய் உடலில் ஏற்படும் உயிரியல் மாற்றமே. மாதவிடாய் இரத்தம் குறித்த பல பொய்யான தகவல் பரவும் போது சபரிதாவின் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. ஆனால், எல்லோராலும் மாதவிடாய் இரத்தத்தை சுகாதாரத்துடன் கையாள முடியுமா? என்பதையும் மாதவிடாய் இரத்த ஓவியத்தின் மூலம் எந்த தொற்று ஏற்படாமலிருக்குமா என்பதையும் இன்னொரு முறை மருத்துவரிடம் சபரிதா உறுதிப்படுத்திக்கொள்வது முக்கியம்.

# காலையில் நன்றாகத்தான் பேசுகிறார் மாலையில் குண்டு வீசுகிறார் புடின் மீது டிரம்ப் பாய்ச்சல்!



நன்றாக பேசிவிட்டு பின் அனைவர் மீதும் குண்டு வீசுகிறார் என ரஷ்ய அதிபர் புடின் மீது அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டுவர அதிபர் டிரம்ப் முயற்சித்து வருகிறார். ஆனால் உக்ரைனில் ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. இது தொடர்பாக வாஷிங்டனில் நிருபர்கள் சந்திப்பில் டிரம்ப் கூறியதாவது: ரஷ்ய அதிபர் புடின் நன்றாக பேசிவிட்டு பின் அனைவர் மீதும் குண்டு வீசுகிறார்.


உக்ரைனுக்கு புதிய வான் பாதுகாப்பு அமைப்புகளை அமெரிக்கா அனுப்ப உள்ளது. ரஷ்யா மீது மேலும் பொருளாதார தடைகள் விதிக்கப்படும். புடின் உண்மையிலேயே பலரை ஆச்சரியப்படுத்தினார். அவர் நன்றாகப் பேசுகிறார், பின்னர் மாலையில் அனைவரையும் தாக்குகிறார்.

அவர் ஜபுடின்ஸ தான் சொன்னதை புரிந்து கொள்வார் என்று நான் நினைத்தேன். அவர் இரவில் அனைவரையும் குண்டுவீசித் தாக்கி வருவது எங்களுக்கு பிடிக்கவில்லை. இதுவரை போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற போது உக்ரைன்- ரஷ்யா இடையே நிலவி வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என டிரம்ப் கூறியிருந்தார்.

ஆனாலும் போர் தொடர்ந்து நிலவி வருவதால், ரஷ்ய அதிபர் புடின் மீது அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தனது அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளார். (ஐ)

## காசாவில் ஏவுகணை தாக்குதலில் 20 குழந்தைகள் பலி தொழில்நுட்ப தவறு என காரணம் சொல்கிறது இஸ்ரேல்!



காசாவில் ஏவுகணை தாக்குதலில் 20 குழந்தைகள் உயிரிழந்த சம்பவம், தொழில்நுட்ப தவறு தான் காரணம் என இஸ்ரேல் பாதுகாப்பு படை விளக்கம் அளித்துள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேல், பாலஸ்தீனத்தின் காசா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பினர் இடையே, 2023 அக்டோபரில் போர் துவங்கியது. காசா பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கும் பொறுப்பை, காசா மனிதாபிமான அறக்கட்டளையிடம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா வழங்கியுள்ளன.

இங்கு நாளொன்றுக்கு ஐந்து சரக்கு லாரிகளில் நிவாரண பொருட்கள் வருகின்றன. அவற்றை பெறுவதற்கு தினமும் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. காசாவில் உதவி மையங்களை குறிவைத்து இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 43 பேர் கொல்லப்பட்டனர். நுசைரத் அகதிகள் முகாமில் தண்ணீர் விநியோக இடத்தில் இஸ்ரேல் படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் 20 குழந்தைகள் உட்பட 34 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் சந்தை மற்றும் தண்ணீர் விநியோக இடத்தில் இருந்தவர்களும் அடங்குவர். இந்த சம்பவம் தொழில்நுட்பக் கோளாறால் ஏற்பட்டதாகக் கூறிய இஸ்ரேல் ராணுவம், தற்போது இது குறித்து விசாரித்து வருகிறோம் என விளக்கம் அளித்துள்ளது. (ஐ)

## அமெரிக்க சர்ச்சில் துப்பாக்கிச்சூடு பெண்கள் இருவர் உயிரிழப்பு

*அமெரிக்காவின் கென்டக்கி நகரில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கி சூட்டில் பெண்கள் இருவர் கொல்லப்பட்டனர். கொலையாளியை போலீசார் சுட்டுக் கொன்றனர்.*

*அமெரிக்காவில் கென்டக்கி நகரில் உள்ள ரிச்மண்ட் சாலையில் சர்ச் உள்ளது. இந்த சர்ச்சில் திடீரென மர்மநபர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் பெண்கள் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் ஆண்கள் 2 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.*

*காயம் அடைந்தவர்கள் பெவர்லி கம் (72), கிறிஸ்டினா கோம்ப்ஸ் (34) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூடு நடத்தியதாக சந்தேகப்படும் நபரை போலீசார் சுட்டுக் கொன்றனர். துப்பாக்கிச்சூடு நடத்தியவர் அடையாளம் காணப்பட்டாலும், அவரது பெயரை போலீசார் வெளியிடவில்லை.*

*இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்கு கென்டக்கி கவர்னர் பெஷியர் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: இந்த வன்முறை செயலால் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் பிரார்த்தனை செய்கிறேன்.*

*இந்த சம்பவத்திற்கு காரணமான குற்றவாளிக்கு விரைவான பதில் அளித்த போலீசாருக்கு நன்றி தெரிவிப்போம். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)*



## கனடா இந்தியர்கள் ரத யாத்திரையில் முட்டை வீசி தாக்குதல்: இனவெறி கும்பல் அட்டூழியம்

கனடாவில் இந்தியர்கள் நடத்திய ரத யாத்திரையின் போது, மர்ம நபர்கள் முட்டைகளை வீசி தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டொரோன்டோ நகரில் இந்தியர்களின் ரத யாத்திரை நிகழ்ச்சி நடைபெற்றது. பக்தி பாடல்களை பாடியபடியும், கடவுளின் பெயரைச் சொல்லி கோஷமிட்டபடி இந்தியர்கள் ஊர்வலமாக சென்று கொண்டிருந்தனர். அப்போது, அவர்கள் மீது சிலர் முட்டைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகியது. அந்த வீடியோவில் சாலையின் ஓரத்தில் இருந்த கட்டடங்களில் இருந்து முட்டைகளை, யாத்திரை சென்ற இந்தியர்கள் மீது வீசுவது தெரிய வந்தது. இது இனவெறி தாக்குதல் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் கூறும்போது, 'முட்டைகளை வீசி தாக்குதல் நடத்தும் போது அதிர்ந்து போய் விட்டோம். எங்களின் ரத யாத்திரையை நிறுத்த வேண்டும் என்று நோக்கத்தில் இந்த செயலை செய்தனர். ஆனால், அவர்களின் எண்ணம் தோல்வியடைந்து விட்டது. வெறுப்பு ஒருபோதும் வெல்ல முடியாது,' என்றனர். (ஐ)

## இந்தோனேசியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: வீதிகளில் திரண்ட மக்கள்

இந்தோனேசியாவின் கிழக்கு பகுதியில் மாலுக்கு மாகாணத்தில் உள்ள தனிம்பார் தீவுகளில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் கட்டடங்கள், வீடுகள் குலுங்கியது.

அச்சம் அடைந்த பொதுமக்கள் பீதி அடைந்து வீதிகளில் திரண்டனர். பயத்தின் காரணமாக மீண்டும் வீடுகளுக்குள் செல்லாமல் சாலையோரம் தஞ்சம் அடைந்தனர்.

நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆக பதிவாகி உள்ளதாக அமெரிக்க நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது. முதல் கட்ட தரவுகளின்படி சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. சேதம் ஏதேனும் ஏற்பட்டதா என்ற விவரங்களும் வெளியாகவில்லை.

கடந்த 2004ம் ஆண்டு பேரழிவை ஏற்படுத்திய சுனாமி, இந்தோனேசியாவின் சுமத்ரா அருகே மையம் கொண்ட நிலநடுக்கத்தால் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பிரசன்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவிட்டுள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணவீர இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அவர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்தார்.

பின்னர், அவர் கடந்த மே மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தான் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ள நிலையிலேயே அவரது மகன் இவ்வாறு கூறினார்.

"நாங்கள் நிச்சயமாக இந்த அரசாங்கத்தை வீழ்த்துவோம். எனது தந்தை கைது செய்யப்படுகின்றாரோ, இல்லையோ இந்த அரசாங்கம் வீழும் என்பது உறுதி. பழிவாங்கும் இந்த அரசாங்கத்தை விரைவில் வீட்டுக்கு அனுப்பியே தீருவோம்." - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோருடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மேற்படி நபரைக் கைது செய்து விசாரணைகளுக்குப் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

சந்தேகநபரை எதிர்வரும்14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநகர சபையினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் அமைந்திருந்த வீதியோர கடைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கை வவுனியா மாநகர சபையால் இன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்த இடத்தில் இருந்து வேறு மாற்று இடத்துக்குச் சென்று வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஏற்கனவே மாநகர சபையால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அகற்றப்படாத வர்த்தக நிலையங்களை அகற்றும் நடவடிக்கையை மாநகர சபை இன்று முன்னெடுத்தது. இதன்போது வீதியோர வர்த்தக நிலைய உரிமையாளர்களால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் வர்த்தகர்களுக்கும் மாநகர சபை உறுப்பினர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அவ்விடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டதுடன், வீதியோரமாக இருந்த வர்த்தக நிலையங்களும் முழுமையாக அகற்றப்பட்டன. பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டனர்.

## கடும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுக்குக் கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை துமிந்த திஸாநாயக்க கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, துமிந்த திஸாநாயக்கவை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன உத்தரவிட்டார்.

சரீரப் பிணை வழங்கும் இரண்டு நபர்களும் கொழும்புப் பகுதியில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் எனவும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

மேலதிகமாக, சந்தேகநபருக்குப் பயணத் தடை விதித்த நீதிமன்றம், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டது.

சந்தேகநபருக்குப் பிணை வழங்குவதற்குச் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கடும் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை வழங்கும் போது, சந்தேகநபர் துப்பாக்கி வைத்திருந்தது இன்னும் வெளிப்படுத்தப்படாததால் நீதிமன்றம் பிணை வழங்கத் தீர்மானித்துள்ளது என்று அறிவித்தார். கடந்த மே மாதம் 23 ஆம் திகதி பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் பின்னர் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மே மாதம் 20 ஆம் திகதி கொழும்பு - வெள்ளவத்தையில் உள்ள ஒரு சொகுசு அடுக்குமாடி குடியிருப்பில் பெண்ணின் பயணப் பையில் கண்டுபிடிக்கப்பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி தொடர்பில் துமிந்த திஸாநாயக்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அதிகாரத்துக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் அனைத்து தகவல்களையும் அறிந்திருந்தார் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது தெரிவித்தார்.

பிள்ளையான் அவ்வாறு தகவல்களை அறிந்து வைத்திருந்தால் அது பாரதூரமான விடயம். தகவல்கள் தெரிந்தும் அவற்றை வெளிப்படுத்தவில்லையெனில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆனால், கிழக்கில் ஆட்சியமைப்பதற்குப் பிள்ளையானுடனும் என்.பி.பி. காரர்கள் பேச்சு நடத்தினார்கள். சில சபைகளில் ஆதரவும் பெற்றுள்ளனர். கள்வர்கள், மோசடியாளர்கள் எனக் கூறிய தரப்புகளுடனும் இவர்கள் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளனர். இரகசிய வாக்கெடுப்பு நடத்தினர்.

அதிகாரத்துக்காக எதையும் செய்யத் தயார் என்ற விடயத்தையே இதன்மூலம் அவர்கள் குறிப்பிடுகின்றனர். எதிரணியில் இருந்த தேசிய மக்கள் சக்தி அல்ல தற்போது ஆளும் கட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி." - என்றார்.

# பொதி செய்யப்படாத எண்ணெய் விற்பனை நிறுத்தப்படும்



கொழும்பு, ஜூலை 14

சந்தையில் பொதி செய்யப்படாத தேங்காய் எண்ணெய் விற்பனையை நிறுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தேங்காய் மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் சாந்த ரணவக்க தெரிவித்தார்.

ஊடக சந்திப்பு ஒன்று ஞாயிற்றுக்கிழமை அன்று இடம்பெற்ற போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் பல்வேறு வகையான எண்ணெய்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகவும், இந்த எண்ணெய்களை உட்கொள்வதால் தொற்றாத நோய்கள் ஏற்படும் என்று பலர் கூறுவதாகவும் அவர் கூறினார்.

எனவே, தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் சந்தையில் வெளியிடப்படும் எண்ணெய்யை உற்பத்தியாளர் உட்பட தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய பொதியுடன் சந்தைக்கு வெளியிட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த சூழ்நிலைக்கு ஏற்ப சில மாதங்கள் அவகாசம் அளிப்பதாகவும், பின்னர் இதை செயல்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

சந்தையில் தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் கலப்பட எண்ணெய் விற்பனையைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# முன் பிணை கோரி ராஜித மனு

கொழும்பு, ஜூலை 14

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வும் திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்து அரசாங்கத்திற்கு 2.63 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தினார் எனக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்துத் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட முன் பிணை மனுவைப் பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி, இந்த வழக்கு தொடர்பான சான்றுகளை எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

# முதியோர் இல்லத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஏழு பேர் வைத்தியசாலையில்!

பதுளை, ஜூலை 14

பதுளை - ஹாலிஎல பிரதேசத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முதியோர் இல்லத்துக்கு அருகில் இருந்த குளவிக் கூடு ஒன்று கலைந்ததால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இதன்போது முதியோர் இல்லத்தில் இருந்த 7 முதியவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ள நிலையில் அம்புலன்ஸ் சேவை ஊடாக பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகிய முதியவர்களின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# அக்கரைப்பற்றில் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டம்





அக்கரைப்பற்று, ஜூலை 14

அரசின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரை பிரதேசங்கள் துப்பரவு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுளளன.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவின் ஆலோசனையின் பேரில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஸட்.ஏ.எம். பைசாலின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் இந்த வேலைத்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுமார் 2.5 கிலோமீற்றர் அளவிலான கடற்கரைப் பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக கடற்கரைப் பிரதேசங்களை பேணிப் பாதுகாப்பது தொடர்பிலான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் அக்கரைப்பற்று மாநகர மேயர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையில் இடம்பெற்றது.

இதில் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர், பிரதி மேயர் உட்பட உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2025 வெளியிடப்பெற்றது.